## வரலாறு காணாத வகையில் 2 இலட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொண்டர்கள் திரண்டனர்!

# முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் 'முப்பெரும் விழா' - கரூர் நகரமே குலுங்கியது!

## 1 இலட்சத்திற்கும் மேற்பட்ட மகளிர் பங்கேற்பு ! இடம் போதாமல் மைதானத்திற்கு வெளியே 1.5 லட்சம் தொண்டர்கள் கூடியிருந்தனர் !

**கரூர், செப். 19**

**தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் கரூர் நகரமே குலுங்கியது !**

**வரலாறு காணாத வகையில் 2 இலட்சத்து 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொண்டர்கள் திரண்டனர் ! 1 இலட்சத்திற்கும் மேற்பட்ட மகளிர் பங்கேற்றனர்! இடம் போதாமல் மைதானத்திற்கு வெளியே 1.5 லட்சம் தொண்டர்கள் கூடியிருந்தனர் !**

**நாற்காலிகளை குடையாக்கி தூக்கி பிடித்து கொட்டும் மழையிலும் இடத்தை விட்டு நகராமல் நின்றனர் - நிர்வாகிகள் தொண்டர்கள் பொதுமக்கள் ! கழகத் தளகர்த்தர்களுக்கு வழங்கப்படும் விருதுகளுடன் மண்டலம் வாரியாக சிறப்பாகச் செயல்படும் 50 நிர்வாகிகளுக்கு உத்வேகமூட்டும் விருதுகள் வழங்கப்பட்டன ! 1949ல் தி.மு.க. தொடங்கப்பட்ட ராபின்சன் பூங்கா மழைக் கூட்டத்தை கரூர் கூட்டம் நினைவுபடுத்தியது எனின் அது மிகையல்ல.**



அதன் விவரம் வருமாறு:-

பேரறிஞர் அண்ணா அவர்கள் 1949 செப்டம்பர் 17 அன்று சென்னை இராயபுரம் இராபின்சன் பூங்காவில் கொட்டும் மழையிலும், கூடி நின்ற உடன் பிறப்புகள் முன்னிலையில் தமிழின பண்பாட்டுப் பெருமைகளைக் காப்போம் எனும் முழக்கத்துடன் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தொடங்கினார்கள்.

75 ஆண்டுகால தியாக வரலாறுகளுடன் கரூர் மாநகரில் எவராலும் அழிக்க முடியாத - எல்லோரும் ஏற்கக்கூடிய கட்டுப்பாடுகளுடன் தந்தை பெரியார் பிறந்த நாள் பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் கழகம் தோன்றிய நாள் எனும் முப்பெரும் திருநாள்களின் பெருவிழாவாக நடைபெற்ற முப்பெரும் விழாவில் இலட்சக் கணக்கான உடன்



பிறப்புகளும்; ஏறத்தாழ 1 இலட்சத்திற்கும் மேற்பட்ட மகளிரும்; கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் 2026 சட்ட

## கழகத் தளகர்த்தர்களுக்கு வழங்கப்படும் விருதுகளுடன் மண்டலம் வாரியாக சிறப்பாகச் செயல்படும் 50 நிர்வாகிகளுக்கு உத்வேகமூட்டும் விருதுகள் வழங்கப்பட்டன!

மன்றத் தேர்தலின் வெற்றிக்குக் கட்டியம் கூறுவது போல் எழுச்சியுடன் கூடினர்.

கரூரில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் வரலாறு காணாத வகையில் 1 லட்சம் நாற்காலிகள் போடப்பட்டன. ஆனால், இடம் போதாமல் மைதானத்திற்கு வெளியே 1 இலட்சத்து 50 ஆயிரம் லட்சம் தொண்டர்களும், பொதுமக்களும், கழகமுன்னணியினர் தலைமைக் கழக, மாவட்ட, ஒன்றிய, நகரபேரூர், சிற்றூர்கழகக்கிளைகளின் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

**எஃகு போல் உறுதிமிக்க தி.மு.கழகம்!**

தமிழ்நாட்டின் மொழி, இன, பண்பாட்டு உரிமைகளைக் காப்பதை உன்னத இலட்சியமாகக் கொண்டு தொடங்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகம், வெள்ளி விழா - பொன் விழாக்களைக் கொண்டாடி 75 ஆண்டுகள் கடந்து பவள விழாவையும் நடத்தி - 75 ஆண்டுகளில் இந்திய நாட்டிற்கே வழிகாட்டும் வகையில் ஜனநாயகப் பாடம் கற்பித்து எஃகு போல் உறுதியாக நிற்கும் ஒப்பற்ற புகழைக் குவித்துள்ளது.

1974 முதல் நடைபெற்று வரும் முப்பெரும் விழாவில், 1985 முதல் கழக வளர்ச்சியில் விழுப்புண்கள் ஏற்று முத்திரைகள் பதித்து தொண்டாற்றியுள்ள பெருமக்களுக்கு விருதுகள் வழங்கிப் போற்றும் மரபுகள் தொடங்கியது. அதே வழியில் இந்த ஆண்டின் முப்பெரும் விழாவிலும், தந்தை பெரியார் விருது, பேரறிஞர் அண்ணா விருது, முத்தமிழறிஞர் கலைஞர் விருது, பாவேந்தர் பாரதிதாசன் விருது, திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் ஆகியோர் பெயர்களிலான விருதுகளுடன் முரசொலி செல்வம் அவர்களின் பெயரிலான விருதும், மண்டலம் வாரியாக சிறப்பாகச் செயல்படும் 50 நிர்வாகிகளுக்கு உத்வேகமூட்டும் விருதும் இலட்சோப இலட்சம் தொண்டர்களின் முன்னிலையில் வழங்கப்பட்டு பாராட்டுரைகள் அளிக்கப்பட்டன.

முன்னணித் தலைவர்கள் உரையாற்றியபின், கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேருரையாற்றினார்கள். அவ்வுரையில்,

**எதிரிகளை கலங்கடிக்கும் வெற்றிகள்!**

"2019ம் ஆண்டு முதல் நாம் எதிர்கொண்ட அனைத்துத் தேர்தல்களிலும் வெற்றி பெற்று வருகிறோம். சாதாரண வெற்றி அல்ல; எதிரிகளை எல்லாம் கலங்கடிக்கும் வெற்றியைப் பெற்று வருகிறோம். இந்த வெற்றிப் பயணம் 2026ஆம் ஆண்டிலும் நிச்சயம் தொடரும். திராவிட மாடல் 2.0 ஆட்சி நிச்சயம் அமையும். நான் பெருமையுடன் சொல்கிறேன். இந்தியாவில் ஆயிரக் கணக்கான அரசியல் இயக்கங்கள் இருக்கின்றன. எந்த இயக்கத்திலும் உங்களைப் போன்ற கொள்கை உணர்வுடைய தொண்டர்கள் இருக்க மாட்டார்கள். இப்படிக் கடுமையாக



## நாற்காலிகளை குடையாக்கி தூக்கிப் பிடித்து கொட்டும் மழையிலும் இடத்தைவிட்டு நகராமல் நின்றனர் – நிர்வாகிகள் – தொண்டர்கள் – பொதுமக்கள்!

உழைக்கவும் மாட்டார்கள். கழகம் நம்மைக் காத்தது. நாம் கழகத்தைக் காக்க வேண்டும் என்று உழைக்கும் உங்களைப் போன்ற உடன் பிறப்புகள் இருக்கும் வரை எந்தக் கொம்பனாலும் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தோற்கடிக்க முடியாது. உங்களுக்கு தலைமைத் தொண்டனாக இருப்பது என் வாழ்க்கையில் நான் பெற்ற பெரும் பேறு" என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்கள்.

**தலைமை தொண்டனாக இருப்பது நான் பெற்ற பேறு!**

தொடர்ந்து பேசும்போது, திராவிட முன்னேற்றக் கழகத்தின் பெருமையைச் சுட்டிக் கூறும் வகையில், "இந்தி மட்டுமே ஆட்சிமொழி என்று ஒரு நிலை உருவான போது தமிழ்நாடு போராடி மொழிப்போர் நடத்தி ஒட்டு மொத்த இந்தியாவையும் காப்பாற்றியதோ அதே போன்று இப்போது ஓர் உரிமைப் போரை நடத்தி நாட்டைக் காப்பாற்ற வேண்டிய வரலாற்றுக் கடமை நமக்கு இருக்கிறது. இந்தப் போராட்டத்தில் முன்கள வீரனாக உங்களுடன் 23 வயதில் எமர்ஜென்சியை எதிர்த்துச் சிறைக்குச் சென்ற இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் இருக்கிறேன்.

நமக்குத் துணையாக தந்தை பெரியார் பேரறிஞர் அண்ணா முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் விதைத்த இனமான உணர்விருக்கிறது. 8 கோடி தமிழ் மக்களின் ஆற்றலும் ஆதரவும் நமக்குப் பக்கபலமாக இருக்கிறது. இதே உறுதியுடன் போராடுவோம்" என்று கூறியதுடன், பல்வேறு பகுதிகளிலிருந்தும் கரூருக்கு வந்திருக்கும் உடன்பிறப்புகள் அனைவரும் உங்கள் ஊருக்கு பத்திரமாக திரும்ப வேண்டும். அதிவேக பயணங்கள் வேண்டாம். பத்திரமாக வீட்டுக்குச் செல்லுங்கள்" என்று தொண்டர்கள் மீது கொண்டுள்ள ஆழ்ந்த பரிவுணர்வோடு கூறி" உரையை நிறைவு செய்தார்கள்.



கொட்டும் மழையிலும் பொதுமக்கள் கலைந்து செல்லாமல் சேர்களை தங்கள் தலையின்மீது உயர்த்தி பிடித்து ஆரவாரத்துடன் முதலமைச்சர் அவர்களின் பேச்சை கேட்டு மகிழ்ந்தினர்.

## 1949ல் தி.மு.க. தொடங்கப்பட்ட ராபின்சன் பூங்கா மழைக் கூட்டத்தை கரூர் கூட்டம் நினைவுபடுத்தியது எனின் அது மிகையல்ல!

இளைஞர்கள், மகளிர், கழகத் தொண்டர்கள், நிர்வாகிகள், பொதுமக்கள் என அனைவரும் பெருந்திரளாக கலந்துகொண்டனர். திராவிட மாடல் அரசு வழங்கி வரும் திட்டங்களில் பயன்பெறுவோர்களாகவும் தங்களுடைய மகிழ்ச்சியை ஆதரவையும் தெரிவிக்கும் வகையில் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றதாக தெரிவித்தனர்.

**பா.ஜ.க. – அ.தி.மு.க.வின் திட்டங்களை வெட்டவெளிச்சமிட்டார்!**

ஒன்றிய அரசின் அடக்குமுறை, ஆதிக்கம், இந்தித் திணிப்புக்கு எதிராகவும், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும் எதிரான கொள்கையை கொண்டிருக்கும் பா.ஜ.க. அரசையும், அதற்குத் துணை போகும் அ.தி.மு.க. பழனிசாமியையும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெட்டவெளிச்சம் போட்டு, தன்னுடைய பேச்சில் எடுத்துரைத்தபோது மிகப்பெரும் ஆரவாரத்துடன் கூடியிருந்த மக்கள் கேட்டு, கைத்தட்டி உற்சாகமூட்டினர்.

100 அடி கொடிமரம் நிறுவப்பட்டு அதில், தி.மு.க. கொடி பட்டொளி வீசி பறந்தது அனைவரையும் கவர்ந்தது. இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை புதுவகையான வான வேடிக்கைகளுடன் தொண்டர்கள் வரவேற்றது அனைவரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியது.

**தி.மு.க. 2026 தேர்தலில் புது வரலாறு படைக்கும்!**

இந்தத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் புதிய தேர்தல் வரலாறு படைக்கும் என முதலமைச்சர் தெரிவித்தபோது பொதுமக்கள் மிகப்பெரிய ஆரவாரம் செய்தனர்

இந்த முப்பெரும் விழா திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டின் மீதும், கழகத் தொண்டர்கள் மீதும் கொண்டுள்ள உயிரனைய ஈடுபாட்டினை உணர்த்தும் திருவிழாவாக அமைந்தது என்று கூறினால் அது மிகையில்லை.